OS No. 59/2016

வா.சா.1 - ராஜசுந்தரம்

நாள் -02.03.2023

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் வட்டி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த நீதிமன்றத்திலும் குற்றவியல் நீதிமன்றதிலும் கடன் வசூல் செய்வதற்காக மொத்தம் 16 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 9 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். நான் கடன் கொடுக்கும் போது பூர்த்தி செய்யப்பட்ட காசோலை தான் வாங்குவேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் தேதி குறிப்பிட வில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி வீரமணி இறப்பதற்கு முன்பே பள்ளி நடத்தி வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வீரமணி 2015 மே மாதம் இறந்தார். நான் கடன் செலுத்துமாறு வீரமணிக்கு அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்களில் சாட்சி மற்றும் எழுத்துகாரர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தேதியில் தான் வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்களும் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ. 6 ல் வா.சா.ஆ.3 முதல் 5 வரை ஆவணங்களை குறிப்பிட வில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது